தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 23 /பேரூ/2021

நாள் 30.11.2021

திரு. S. வெங்கடாசலம்,
நாங்குநேரி, திருநெல்வேலி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருக்குறுங்குடி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், திருக்குறுங்குடி பேரூராட்சி, கதவு எண்.52/76 தெற்கு ரத வீதி, திருக்குறுங்குடி என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. வெங்கடாசலம் என்பவரது 20.08.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.8.2020ல் பெறப்பட்டு 23/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், திருக்குறுங்குடி பேரூராட்சி, கதவு எண்.52/76 தெற்கு ரத வீதி, திருக்குறுங்குடி என்ற முகவரியில் வசிக்கும் திரு. S. வெங்கடாசலம் என்பவர் தனது 20.8.2020 நாளிட்ட மனுவில் "திருக்குறுங்குடி பேரூராட்சி வார்டு எண்.9ல் கதவு எண்கள் 78–1/93 மற்றும் 78/92 கொண்ட வீடுகளை தான் கிரையம் வாங்கி அதன் பின்பு திருக்குறுங்குடி பேரூராட்சியில் வீட்டு தீர்வை பெயர் மாற்றத்திற்கான மனு கொடுத்ததாகவும், அவர்கள் ஆவணங்களை எல்லாம் சரிபார்த்த பின்பு 28.4.2017 அன்று கட்டணம் ரூ.7,000/– என கூறினார்கள் என்றும், அதன்படி மனுதாரர் தனது வகையாள் கலைமணி என்பவரிடம் பணம் கொடுத்து செலுத்தியபின் அதற்கான ரசீது வேண்டும் என கேட்டதற்கிணங்க, அவர்களும் பணம் செலுத்துபவர் பிரதி ரசீது எண்.51/2017–18 நாள் 28.4.2017 என ரசீது தந்துவிட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அதில் வீட்டு தீர்வை பெயர்மாற்றக் கட்டணம் ரூ.300/– எனவும், காலிமனை வரி ரூ.5,440/– எனவும், ஆகமொத்தம் ரூ.5,740/–க்கு ரசீதில் உள்ளது. தான் அவர்களிடம் நத்தம் காலிமனைக்கு வரி கிடையாது என வாதிட்டதாகவும்,

பேரூராட்சி நிர்வாகம் அதற்கு காலிமனை வரி உண்டு என கூறினார்கள். தமக்கு சந்தேகம் ஏற்பட்டு, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம், முதலமைச்சர் தனிப்பிரிவு மற்றும் இணையதளம் மூலமாக மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் மனு செய்து அதற்கு பேரூராட்சி நிர்வாகம் பதில் தந்துள்ளார்கள் என்றும், அதில் பெயர் மாற்றக் கட்டணம் ரூ.5,100/– என மட்டும் தந்துள்ளார்கள். அவர்களது பதில்படி ரூ.5,100/– மட்டுமென்றால், பாக்கி ரூ.640/– எங்கே போயிற்று. இந்த பணத்தை அவர்கள் அரசுக்கு செலுத்தவேண்டிய கணக்கில் செலுத்தவில்லை. இந்த பணம் அவர்கள் கையாடல் செய்திருப்பது தெளிவாக தெரிகிறது. எனவே, சம்மந்தப்பட்ட அதிகாரி மற்றும் ஊழியர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மனுதாரர் கோரியுள்ளார். மேலும், திருக்குறுங்குடி பேரூராட்சியில் அதே வருடத்தில் சில நபர்கள் பெயர்மாற்றம் செய்துள்ளார்கள் அவர்களுக்கு காலிமனைக்கு வரிவசூல் செய்யப்படவில்லை. அதன் விவரம் வருமாறு

1. கதவு எண்.28/10 தெற்கு ரத வீதி செலுத்து சீட்டு எண்
2. கதவு எண்.122 டி.எஸ்.151ம் தெரு செலுத்து சீட்டு எண்
3. கதவு எண்.22 தென்கரை மேலத்தெரு செலுத்து சீட்டு எண்

இந்த தகவல் பேரூராட்சி அலுவலகத்திலிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தான் பெற்ற தகவலாகுமென்றும், தமது மனுவுடன் எல்லா ஆவணங்களையும் இணைத்துள்ளதாகவும் தெரிவித்து, இதன் மீது விசாரணை மேற்கொண்டு, உரிய ஆணையினைப் பிறப்பிக்கக்கோரி மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார்.

2. திருக்குறுங்குடி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 11.10.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.9.2021 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேற்கண்ட இருவரும் 11.10.2021 அன்று இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

முறையீட்டு மனுதாரர் திரு.S. வெங்கடாசலம் 11.10.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் “திருக்குறுங்குடி பேரூராட்சி வார்டு எண்.9 கதவு எண்கள் 78–1/93 மற்றும் 78/92ல் அமைந்துள்ள எனது வீட்டிற்கு வீட்டுத் தீர்வை பெயர் மாற்றம் என்னால் விண்ணப்பம் அளிக்கப்பட்டு, வீட்டுத் தீர்வை பெயர் மாற்றக் கட்டணம் ரூ.300/– (ரூபாய் முன்னூறு) எனவும், காலிமனை வரி ரூ.5440/– (ரூபாய் ஐந்தாயிரத்து நானூற்று நாற்பது மட்டும்) எனவும், ஆகமொத்தம் ரூ–5,740/– (ரூபாய் ஐந்தாயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்) என்னிடத்தில் வசூல் செய்யப்பட்டு, மேற்கண்ட தொகையான ரூ.5,740/– (ரூபாய் ஐந்தாயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்) 28.4.2017 நாளிட்ட ரசீது பேரூராட்சியால் எனக்கு வழங்கப்பட்டது. மேற்கண்ட வரிவசூல் தகவலை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் கேட்டபோது என்னிடம் ரூ.5,100/– (ரூபாய் ஐந்தாயிரத்து நூறு மட்டும்) வசூலித்ததாக தகவல் அளித்துள்ளனர். அப்படியென்றால், ரூ.5,740/– வசூலித்துவிட்டு, ரூ.5,100/– என தகவல் பெறப்பட்டுள்ளதால், மீதமுள்ள 640/– ரூபாயை பேரூராட்சி அலுவலர்களால் கையாடல் செய்யப்பட்டுள்ளது என தெளிவாகத் தெரிகிறது. எனவே, கையாடல் செய்த பேரூராட்சி ஊழியர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேற்கண்ட நிகழ்வு தொடர்பாக பேரூராட்சியால் எனக்கு வழங்கப்பட்ட ரசீதின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

3. திருக்குறுங்குடி பேரூராட்சி செயல் அலுவலர் 11.10.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "திருக்குறுங்குடி பேரூராட்சி வார்டு எண்.9 கதவு எண்.78–1/93 மற்றும் 78/92ல் வசிக்கும் திரு. எஸ். வெங்கடாசலம் என்பவரின் வீட்டிற்கு சொத்துவரி பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பம் பெறப்பட்டு, பரிசீலனைக்குப் பின்னர் பெயர்மாற்றக் கட்டணம் ரூ.300/– (ரூபாய் முன்னூறு மட்டும்) மற்றும் காலிமனை வரி ரூ.4,800/– (ரூபாய் நான்காயிரத்து எண்ணூறு மட்டும்) ஆகமொத்தம் ரூ.5,100/– (ரூபாய் ஐந்தாயிரத்து நூறு மட்டும்) மனுதாரரிடம் வசூலிக்கப்பட்டு, அத்தொகை பேரூராட்சி வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதாக ஆவணங்களின்படி உள்ளது. மேற்கண்ட நிகழ்வு வேறொரு செயல் அலுவலர் இருந்தபோது நடைபெற்றுள்ளதால் மேற்கண்ட ரசீது எவ்வாறு அளிக்கப்பட்டது என்பது குறித்து எனக்குத் தெரியவில்லை என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ரசீது அளிக்கும்போது மூன்று பிரதிகளைக் கொண்ட Triplicate Challan–ல் பணம் செலுத்துபவர் பிரதியில் ரூ.5,740/– (ரூபாய் ஐந்தாயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்) என குறிப்பிடப்பட்டு ரசீது வழங்கப்பட்ட விவரம் இன்று முறைமன்ற நடுவத்தில் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின்படி அறிய வந்தேன். அதாவது மனுதாரரிடம் ரூ.5,740/–க்கு (ரூபாய் ஐந்தாயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்) ரசீது வழங்கி, பேரூராட்சி ஆவணங்களில் ரூ.5,100/– (ரூபாய் ஐந்தாயிரத்து நூறு மட்டும்) என பதிவு செய்துள்ளதனை தற்போதுதான் கண்டறிந்தேன். மேற்கண்ட நிகழ்வு, செயல் அலுவலர் பரஞ்சோதி, இளநிலை உதவியாளர் திருமதி. உஷா கிரேசி மற்றும் வரி வசூலர் சாந்தகுமார் ஆகியோர் பணிபுரிந்த காலத்தில் நடைபெற்றுள்ளது. மனுதாரரால் செலுத்தப்பட்ட வீட்டுத் தீர்வை மாற்றத்திற்கான கட்டணம் ரூ.5,100/–க்கான (ரூபாய் ஐந்தாயிரத்து நூறு மட்டும்) பேரூராட்சியால் அளிக்கப்பட்ட ரசீதினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரது புகார் மனு குறித்து, திருக்குறுங்குடி பேரூராட்சி செயல் அலுவலரால் இம்முறைமன்ற நடுவத்திற்கு 27.07.2021 நாளிட்டு அளிக்கப்பட்டுள்ள விளக்க அறிக்கையில் புகார் மனுதாரர் திரு. செ. வெங்கடாசலம் மற்றும் அவரது மனைவி திருமதி. சுப்புலெட்சுமி ஆகிய இருவரும் கூட்டாக கிரையம் செய்த வார்டு எண்.9 தெற்குரத வீதியில் அமைந்துள்ள கதவு எண்.78/92 மற்றும் 78/93 ஆகிய இரு கட்டிடங்களுக்கான பெயர் மாற்றம் செய்ய 31.3.2017 அன்று அளித்த மனுவின் அடிப்படையில், கதவு எண் ஒன்றுக்கு ரூ.150/– வீதம் இரண்டு கட்டிடங்களுக்கு ரூ.300/– பெயர்மாற்ற கட்டணமாக வசூலிக்கப்பட்டது என்றும், தவிரவும் காலிமனையுடன் கூடிய மேற்படி கட்டிடங்களுக்கு காலிமனைவரியும் வசூலிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். அதன்பேரில் காலிமனை 300 ச.மீ ஆக கணக்கிடப்பட்டு, சதுர அடிக்கு ரூ.0.10 பைசா என்ற அடிப்படையில் 3195 சதுர அடி காலிமனைக்கு ரூ.320/– வீதம் 15 அரையாண்டுகளுக்கு ரூ.4,800/– வசூலிக்கப்பட்டது. வசூலிக்கப்பட்ட மொத்த தொகை ரூ.5100/– (4800 + 300) செலுத்துச்சீட்டு எண்.51/2017–18 நாள் 28.4.2017இன்படி பேரூராட்சி கணக்கில் வரவாக்கப்பட்டு, தனியருக்கு ரசீதின் நகலும் வழங்கப்பட்டது என்றும், அதன் நகலையே தனியர் தமது முறையீட்டு மனுவுடன் இணைத்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

5. மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் வாக்குமூலத்துடன் அவர் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் திருக்குறுங்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் அவரது அறிக்கை மற்றும் பேரூராட்சி கணக்கில் செலுத்தப்பட்ட தொகைக்கான

ரசீதின் நகல் ஆகியவை அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்டவை கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் தமது புகார் மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள செலுத்துச்சீட்டு எண்.51/17–18 நாள் 28.4.2017–ல் செலுத்துச்சீட்டு எண் மற்றும் நாள் ஆகியன கையால் எழுதப்பட்டு, செயல் அலுவலரால் கையொப்பமிடப்பட்டுள்ளதில் பெயர் மாற்ற விண்ணப்ப கட்டணம் ரூ.300/– மற்றும் காலிமனை வரி ரூ.5,440/–, ஆகமொத்தம் ரூ.5,740/– (ரூபாய் ஐந்தாயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்) வசூலிக்கப்பட்டு, பணம் செலுத்துபவர் பிரதி என குறிப்பிடப்பட்டுள்ள செலுத்துச்சீட்டு பிரதி மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- ஆனால், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன்கீழ் மனுதாரர் திரு. செ. வெங்கடாசலம் அவர்கள் கோரிய தகவல்களுக்கு திருக்குறுங்குடி பேரூராட்சி பொது தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள பதில் அறிக்கையில் தெற்கு ரதவீதியில் கதவு எண்.78/92, 78–1/93 ஆகிய இரண்டு வீடுகளுக்கு வீடு ஒன்றுக்கு ரூ.150/– என்ற விகிதத்தில் ரூ.300/–ம், பெயர் மாற்ற விண்ணப்பத்துடன் இணைத்து வரப்பெற்ற ஆவணங்களின்படி காலிமனை வரி ரூ.4800/–ம் ஆக மொத்தம் ரூ.5,100/–ஐ செலுத்துச்சீட்டு எண்.51/17–18 நாள் 28.4.2017ன்படி வசூலிக்கப்பட்டது" என்ற பதில் அளிக்கப்பட்டுள்ளது.

- ஆனால், திருக்குறுங்குடி பேரூராட்சி செயல் அலுவலர் 11.10.2021 அன்றைய நேரடி விசாரணையின்போது அளித்துள்ள வாக்குமூலத்தில் மனுதாரரிடம் ரூ.5,740/–க்கு (ரூபாய் ஐந்தாயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்) ரசீது வழங்கி, பேரூராட்சி ஆவணங்களில் ரூ.5,100/– (ரூபாய் ஐந்தாயிரத்து நூறு மட்டும்) என பதிவு செய்துள்ளது என்று தெரிவித்துள்ளார். இந்நிகழ்வு செயல் அலுவலர் பரஞ்சோதி, இளநிலை உதவியாளர் திருமதி. உஷா கிரேசி மற்றும் வரி வசூலர் சாந்தகுமார் ஆகியோர் பணிபுரிந்த காலத்தில் நடைபெற்றுள்ளது என்று தெரிவித்து, பெயர் மாற்றக் கட்டணம் மற்றும் காலிமனை வரி ஆகியவற்றிற்கு கட்டணம் ரூ.5,100/–க்கு (ரூபாய் ஐந்தாயிரத்து நூறு மட்டும்) பேரூராட்சியால் அளிக்கப்பட்ட ரசீதினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

- மனுதாரரிடம் ரூ.5,740/– (ரூபாய் ஐந்தாயிரத்து எழுநூற்று நாற்பது மட்டும்) வசூலித்துவிட்டு அதற்கு அவருக்கு போலியான ரசீதினை ரூ.5,740/–க்கு வழங்கிவிட்டு, பேரூராட்சி கணக்கில் ரூ.5,100/–ஐ (ரூபாய் ஐந்தாயிரத்து நூறு மட்டும்) வரவு வைத்து, மீதித் தொகையான ரூ.640/–(ரூபாய் அறுநூற்று நாற்பது மட்டும்) கையாடல் செய்யப்பட்டுள்ளது தெள்ளத் தெளிவாகவும், ஆதார பூர்வமாகவும் நிரூபணமாகிறது.

6. மேற்கண்ட சூழ்நிலையில், போலி ஆவணங்கள் மூலம் மனுதாரரை ஏமாற்றியுள்ளதை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும், மேற்கண்ட மோசடிக்குக் காரணமான அப்போதைய செயல் அலுவலர் திரு. பரஞ்சோதி, இளநிலை உதவியாளர் திருமதி. உஷா கிரேசி மற்றும் வரித் தண்டலர் சாந்தகுமார் ஆகியோர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சி ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. அவர்கள் மீது எடுக்கப்பட்ட ஒழுங்குநடவடிக்கை குறித்த விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்துகிறது. மேலும், மனுதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ள கூடுதல் தொகையான ரூ.640/– (ரூபாய் அறுநூற்று

நாற்பது மட்டும்) சம்மந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து வசூலித்து மனுதாரருக்கு வழங்கிடுமாறும் திருக்குறுங்குடி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2021ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/- x x x x

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. S. வெங்கடாசலம்,
52/76 தெற்கு ரதவீதி, திருக்குறுங்குடி, நாங்குநேரி வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்–627 115.

பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

செயல் அலுவலர்,
திருக்குறுங்குடி தேர்வுநிலை பேரூராட்சி, திருக்குறுங்குடி, திருநெல்வேலி மாவட்டம்–627 115.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலாளர்